மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
நிலையறி பரீட்சை – 2021

தரம் 6 **சைவசமயம்** நேரம் -2 மணித்தியாலங்கள்

## பகுதி 1

1. பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் என விநாயகப் பெருமானை போற்றிப்பாடும் நூல்
   i .வெற்றிவேற்கை ii .திருக்குறள் iii .திருமந்திரம் iv.திருவாசகம்

2. பண்டிகைகளுள் ஒன்றாகக் கொள்ளத்தக்கது
   i .நவராத்திரி ii . சிவராத்திரி iii . தைப்பொங்கல் iv.விநாயகர்சதுர்த்தி

3. ''அரிது அரிது மானிடராதல் அரிது'' எனக் கூறியவர்
   i .ஔவையார் ii . திருமூலர் iii . திருநாவுக்கரசர் iv.தாயுமானவர்

4. சமய விழுமியப் பண்புகளில் ஒன்றாகக் கொள்ளக் கூடியது
   i .களவு ii . பொய் iii . கொலை iv.பெரியோரைக் கனம்பண்ணுதல்

5. கிளியிடம் காணப்பட்ட விழுமியப் பண்பு
   i .உண்மைபேசுதல் ii . நன்றிமறவாமை iii . தருமம் iv.இரக்கம்

6. கர்ணவேதம் என அழைக்கப்படும் சடங்கு
   i .பெயர்சூட்டுதல் ii . காதுகுத்துதல் iii . சோறூட்டுதல் iv.ஏடுதொடக்குதல்

7. தீபாவளிப் பண்டிகைதினத்தில் கிருஸ்ணபகவானால் அழிக்கப்பட்ட அசுரன்
   i .நரகாசுரன் ii . கஜமுகாசுரன் iii . சூரன் iv.மகிடாசுரன்

8. தேவாரஏடுகள் கண்டெடுக்கப்பட்ட இடம்
   i .திருவாவடுதுறை ii . திருப்புகலூர் iii . திருச்செந்தூர் iv.சிதம்பரம்

9. சம்பந்தரது திருமுறைப்பாடல்கள் இடம் பெறும் திருமுறை
   i .1ம்,2ம்,3ம்திருமுறைகள் ii . 4ம்,5ம்,6ம் திருமுறைகள்
   iii . 7ம் திருமுறை iv.8ம் திருமுறை

10. மாறனார் ஆற்றிய பணி
    i .சிவனடியார்களுக்கு திருவமுது படைத்தல் ii . மாலை கட்டுதல்
    iii. தூபம் காட்டுதல் iv.தண்ணீர்ப் பந்தல் அமைத்தல்

11. பஞ்சபுராண வரிசையில் மூன்றாவதாக ஓதப்படக்கூடிய நூல்
    i .தேவாரம் ii . திருவிசைப்பா iii . திருவாசகம் iv.பெரியபுராணம்

12. ஆலயவழிபாட்டில் முதலில் வழிபடும் தெய்வம்
    i .சண்டேஸ்வரர் ii . சிவன் iii . உமை iv.விநாயகர்

13. ஆளுடையபிள்ளையார் எனும் பெயரைக் கொண்டநாயனார்
    i .திருஞானசம்பந்தர் ii . திருநாவுக்கரசர் iii . சுந்தரர் iv.மாணிக்கவாசகர்

kalvi.lk

14. கிழப்பிராமண வடிவம் தாங்கி சுந்தரரை தடுத்தாட்கொண்டவர்
i .சிவபெருமான் ii . பிள்ளையார் iii . முருகப்பெருமான் iv.விஸ்ணு

15. பசுவுக்கு வழங்கப்படும் வேறுபெயர்
i .இறை ii . கடவுள் iii . பரமசிவன் iv.உயிர்

16. மூவகை திருமேனிகளாக கொள்ளப்படுபவை
i .மனம்,வாக்கு,காயம் ii . அருவம்,உருவம்,அருவுருவம்
iii . படைத்தல்,காத்தல்,அழிதல் iv.பதி,பசு,பாசம்

17. சிறுதெய்வமாக வழிபடக்கூடிய தெய்வம்
i .முருகன் ii . கணபதி iii . திருமால் iv.மதுரைவீரன்

18. காகத்தின் வடிவம் எடுத்து வந்து அகத்தியரின் கமண்டல நீரை கவிழ்த்தவர்
i .விநாயகர் ii . முருகன் iii . சிவன் iv.வைரவர்

19. திருவிளக்கு ஒன்றில் காணப்படவேண்டிய சுடர்களின் எண்ணிக்கை
i .நான்கு ii . மூன்று iii . ஐந்து iv.ஒன்பது

20. திருவாசகத்தைப் பாடியவர்
i .சுந்தரர் ii . மாணிக்கவாசகர் iii . நாவுக்கரசர் iv.சம்பந்தர்

Education கல்வி

பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக.

(பெருச்சாளி, ஓங்கார, ஆசீர்வாதம், புனிதமும், பாலபாடம்)

1. _______________ மூர்த்தியாக விநாயகரை வழிபட்டால் நமது அகங்காரம் நீங்கும்.
2. விநாயகரின் வாகனம் _______________ஆகும்.
3. ஓர் சைவஇல்லம் _______________பண்பும் நிறைந்த இடமாகும்.
4. ஆறுமுகநாவலர்_______________ என்ற நூலை எழுதினார்.
5. பெரியோர்களின்_______________ நமக்கு நன்மை தரும்.

தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| A. விநாயகர் | 1.உத்தூளனம் |
| B. திருநீறு | 2.மெய்ம்மை |
| C. உண்மை | 3.ஐங்கரன் |
| D. ஔவையார் | 4.அஸ்வமேதயாகம் |
| E. தர்மபுத்திரர் | 5.ஆத்திசூடி |

(புள்ளிகள்30*2=60)

**பகுதி 2**

1. ஆலயம் என்பதன் பொருள் யாது?
2. இறைவழிபாட்டின் போது பஞ்சபுராணம் ஓதப்படும் முறைகளைத் தருக.
3. சைவமக்களுடைய விசேடதினங்கள் இரண்டு தருக.
4. திருநீறு அணியும் இரண்டு முறைகளை தருக.
5. நாம் உணவு உண்ண முன்பு பாடும் தேவாரம் யாது?
6. ஏடுதொடக்குதலின்  மறுபெயர்கள் இரண்டு தருக.
7. விரதம் என்பதற்கு ஸ்ரீலஸ்ரீஆறுமுகநாவலர் கூறும் வரைவிலக்கணம் யாது?
8. திருமுறைகளை தொகுத்தவர்,தொகுப்பித்தவர் யார்?
9. பெண்கள் செய்யும் நமஸ்காரம் யாது?
10. இறைவனால் தடுத்தாட்கொள்ளப்பட்டவர் யார்?

(புள்ளிகள்10*3=30)

பின்வரும் தேவாரத்தில் ஏதாவது ஒன்றை எழுதி பாடியவர்,தலம் என்பவற்றை தருக**.**

1. இடரினும் தளரினும்.........
2. ஓசை ஒலியெலாம்.............

(புள்ளிகள்10*1=10)

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page